உ
சிவமயம்

Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௯] யாழ்ப்பாணம்—சர்வசித்துஸு வைகாசிமீ ௨௩ ௳ ( 1947 ஜூன் 6 வெள்ளிக்கிழமை) [இல ௧௮

## விபூதி மான்மியம்

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கர்

(முற்றொடர்)

விடியுமுன் னெழுந்து, அநுட்டானம் விதிப்படி முடித்து, பசுக் கோட்டத்திற் சென்று கோசாவித்திரி மந்திரத்தாற் பூசித்துக் கோமயத்தை எடுக்கவேண்டுமென்று சுவாயம்புவ ஆகமம் விளம்பும். இவ்வாகமக் கருத்தைக் கடம்பவன புராணமும் மொழிபெயர்த்துக் கூறும், அட்டமி அமாவாசை பூரணை சதுர்த்தசி கிரகண காலம் என்னுமிவற்றிலொன்றிலே கோமயங் கொள்ளுதல் உத்தமமாம்.

விபூதி யுண்டாக்குவதற்குப் பசுவின் சாணமே சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டது. சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபமிருக்கும். அதன் பக்கத்திலே நந்தை பத்திரை சுரபி சுசீலை சுமனை என்னும் ஐவகைப் பசுக்கள் இருக்கும். இவ்வைந்தும் சிவனது திருவருளினாலே திருப்பாற்கடலில் இருந்து சிவபூசையின் பொருட்டும் யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன. இப்பசுவின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் வசிக்கின்றன என்று சுப்பிரபேதம் சிவதருமோத்தரம் முதலிய ஆகமங்கள் சோஷிக்கின்றன.

பெரியபுராணம்

தங்கு மகில யோனிகட்கு
மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்க
ளெல்லா மென்றும் பொருந்துவன
துங்க வமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்து பிரியாத
வங்க மனைத்துந் தாமுடைய
வல்ல வோநல் லானினங்கள்.

இன்னும் பசுக்கள் சைவர் வைணவர் முதலியோர் தானஞ் செய்யப்படும் பொருளாயிருத்தலினாலும் விசேடமுடையன. அவற்றைக்கொன்றால் மாபாதகமென்றும், கோகத்தியென்றும் தரும நூல்கள் கதறுகின்றன. சண்டேசுர நாயனார் ஆனாய நாயனார் என்னும் திருத்தொண்டர்களுக்கும் பசுவுக்கும் நெருங்கியதொடர்புண்டு; கண்ணபிரான் இடைக் குலத்திற் சேர்ந்ததும் அவற்றின்பின் திரிந்ததும் கோக்களின் பெருமையைப் புலப்படுத்தும். "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என ஞானசம்பந்த பரமாசாரியர் வாழ்த்தினர். அப்பமூர்த்திகளும் "ஆவினுக் கருங்கலமரனஞ் சாடுதல்" என ஆக்களைப் புகழ்ந்தோதினார்கள். தமிழ்ச் சங்க நூல்களிலே அந்தணர்களைக் கூற நேரிட்ட அமையங்களிலெல்லாம் பசுவையும் சேர்த்தே கூறுவர்: "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" (புறநானூறு "எச்சிலார் தீண்டார் பசுப் பார்ப்பார்" ஆசாரக்கோவை) பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப்பெண்டிர் (சிலப்பதிகாரம்) எனப் பசுவையும் பார்ப்பாரையும் ஆன்றோர்கள் சேர்த்துக் கூறவேண்டிய தென்னையெனில், பார்ப்பார் செய்யும் நித்திய நைமித்திக ஆகுதி யச்ஞங்களுக்குப் பசுவின் பால் நெய் முதலியன இன்றியமையாதன வாதலாலேயாம். இத்தனைப் பெருமை வாய்ந்த பசுக்களினின்றே சைவத்துக்கே முதற் காரணமாயுள்ள விபூதி விளைதற்கான மூலப்பொருளைப் பெறுகின்றோம்.

இன்னுங் கோமயத்தின் விசேடத்தைக் கூறின் பசுவின் சாணத்தைப் போலப் பயிரை விளைவிக்கும் வஸ்து வேறொன்றுமில்லை. எவ்வித துர்க்கந்தங்களும் இச்சாணத்தால் நீங்கும். எவ்வித அசுசிகளும் கோமயத்தால் நீங்குகின்றன. உண்டவிடத்து எச்சிலும் இதனால் மாற்றப்படுகின்றது. சைவர்முதலியோர் இச்சாணத்தைக் கொண்டு மெழுகி, இதனைச் சுத்தமுடைப்பொருளாகவும்பிறவற்றைச்சுத்தமாக்கும்பொருளாகவும்மதித்துவருகின்றனர். ஆயுள்வேதக்காரரும்இச்சாணவரட்டிகொண்டு பற்பல மருந்துகளைப்புடமிடுகின்றனர். கோமயத்தாற் செய்யப்பட்ட வரட்டிகொண்டு சமைத்த உணவு மகா புனிதமாகவும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கும் என்பர் பதார்த்தகுண நூலார். இன்னன விசேடமமைந்த சாணம் மந்திரபலத்தால்வெந்து நீறாகிச் சுத்த நீருடன் தரிக்கப்படுமேல் எத்துணைக் குணங்களைத்தானியற்றாது. "புன்மை தவிர்ப்பது நீறு" என்பது தமிழ் மறை.

தரித்தற்கு வெண்ணிற விபூதியே தக்கது. கருநிற விபூதி வியாதியையுண்டாக்கும். செந்நிற விபூதி கீர்த்தியைப் போக்கும். புகைநிற விபூதி ஆயுளைக் குறைக்கும். பொன்னிற விபூதி சம்பத்தைப்போக்கும் வெண்ணிற விபூதி அளவில்லாத புண்ணியத்தை விருத்திபண்ணி முத்தியை உதவும். வெண்மை பரிசுத்தத் தன்மை உணர்த்துவதாம்.

விபூதியைப் பாசங் கண்டெடுத்து புது வஸ்திரத்தினால் வடித்தல்வேண்டும், அவ்விபூதியைப் பொன் வெள்ளி தாமிரம் என்னும் பாத்திரங்களில் வைப்பது முறையே உத்தமம் மத்திமம் அதமம் என்று சொல்லப்படும். இவையன்றி மட்பாத்திரத்திலும்பித்தளைப் பாத்திரத்திலும் சுரைக்குடுகிலும் வைப்பது நலமாம். இது சிவனுரு என நினைத்து அப்பரண்டத்தைச் சுத்தமான இடத்தில் வைத்து மல்லிகை முல்லை பாதிரி சண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை இட்டு புதுவஸ்திரத்தினால் அதன்வாயைக் கட்டி இதுவே நம்முடைய திரவியமென்றெண்ணி வைத்தல் வேண்டுமென்று சிந்திய விசுவம் முதலிய ஆகமங்கள் செப்புகின்றன. "அருத்தமதாவது நீறு" எனவருவதுங் காண்க. அருத்தம்—செல்வம், பின் தரித்துக் கொள்வதற்குப் பட்டுப் பையிலேனும் சம்புடத்திலேனும் சிறிது சிறிதாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். சிந்திய விசுவத்திலே. விபூதி ஆலயத்திற் சத்தியும் விபூதியிற் சதாசிவரும் அதிபராய் இருப்பரென்று கூறப்பட்டுள்ளது

விபூதியை ஒரு கையினால் வாங்குதலாகாது. ஆசாரியர் முதலிய உயர்ந்தோர் விபூதி தரின் வணங்கி இரண்டு கைகளினாலும் வாங்கித் தரித்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## "இவரையே அனுப்புங்கள்!"

### சேர். துரைசுவாமிக்கு மந்திரியின் பாராட்டு

(நமது நிருபர்)

சென்ற 1—6—47 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அரசாங்க சபைத் தலைவர் கௌரவ சேர். வை. துரைசாமி அவர்களும் சுகாதார மந்திரி மிஸ்ரர்.ஜோர்ஜ் டி.சில்வா அவர்களும் மாகாணவைத்தியர் டாக்டர் கந்தையா அவர்களும் சுகாதார வைத்தியர் டாக்டர் துரைராஜா அவர்களும் காரைநகர் துறைமுகத்தையடைந்தனர். துறைமுகத்தில் சப்ததீவு வாலிபசங்கக் காரியதரிசி, திரு. வி. கார்த்திகேசு அவர்களும், மோட்டர்படகுச்சங்கத்தலைவர் திரு. க. வைத்தியலிங்கம் அவர்களும், பல பிரமுகர்களும் எதிர்கொண்டு வரவழைத்தனர். திரு. க. வைத்தியலிங்கம் அவர்கள், தலைவருக்கும் திரு. வி கார்த்திகேசு அவர்கள்மந்திரிக்கும் மாலை சூட்டினார்கள். மந்திரிகோஷ்டியினர் மோட்டர்படகுமூலம் அனலைதீவுக்குப் பிரயாணமாயினர்.

அனலைதீவுப்பாலத்தில் பாடசாலை ஆசிரியர்கள் கிராமச்சங்கத்தலைவர் உளபட, ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்பெண் இருபாலாரும் குழுமி நின்று வரவேற்றனர். பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்களும் கிராமச்சங்கத் தலைவர் திரு. ஐ. சபாபதிப்பிள்ளை அவர்களும் மாலைசூட்டினர். பின்னர் மந்திரிகோஷ்டியினர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பொதுமக்களால் உபகரிக்கப்பட்ட நிலத்தில், கௌரவ மந்திரியார் பிரசவ விடுதிக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். பின்னர் ஸ்ரீசதாசிவ துவிபாஷாபாடசாலையில் ஓர்பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. சேர் துரைசுவாமி தலைமை வகித்தார். பலர் தங்கள் நாட்டின் தேவைகளையும் வைத்திய வசதிகளுக்காக தாங்களடைந்த கஷ்டத்தையும் எடுத்துக்கூறினார்கள். பின்னர் மந்திரி தமிழில் ஓர் சொற்பொழிவாற்றினார். தமது பேச்சில் தலைவரின் குணாதிசயங்களையும், அரசியல் ஞானத்தையும் எடுத்துக்காட்டி, மறுமுறையும்இவரையே அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார். சில தமிழ் அங்கத்தவர் நாட்டில் பெரிய கெடுதியை விளைவிக்கிறார்களென்றும் கூறினார். கூட்ட மத்தியிலே சப்ததீவு இந்து மகாசபைக் காரியதரிசி, நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கோவில் திருவிழாக்காலத்தில் யாத்திரீகர்கட்கு, குடிக்கவும் சமையல் செய்யவும், தண்ணீர் வசதி அரசினர் அளிக்க வேண்டுமெனக் கோரிச் சமர்ப்பித்த மனுவிற்கு உடனே அவ்விதம் செய்வதற்கு உத்தரவிட்டு, சுகாதார வைத்தியர் டக்டர் துரைராசா அவர்களை அதைச் செய்து முடிக்கும்படி மந்திரி கட்டளையிட்டார்.

பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 12 மணியளவில் பூர்த்தியாயிற்று,

## கதிர்காமப் பாதை

### திருத்தப்படும்

திஸமகாருமையிலிருந்து கதிர்காமத்துக்குச் செல்லும் பாதை கூடிய சீக்கிரத்தில் நல்லமுறையில் திருத்தப்படும் என்று போக்குவரத்து மந்திரி மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை அறிவிக்கிறார். அதுவுமன்றி கதிர்காமத்திலிருந்து செல்லக்கதிர்காமத்துக்கும் கதிரைமலைக்கும் போகும் பாதைகளும், பகிரங்கப்பகுதி மேற்பார்வையின்கீழ் விடப்பட்டு ஆக வேண்டிய திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் ஆலோசிக்கப்படுகிறது.

திஸமகாருமையிலிருந்து கதிர்காமம் செல்லும பாதையின் கடைசிப் பகுதி இப்போது உள்ளபடியிராது, வேறு மார்க்கத்தால் விடப்படுமாம்.

## மீண்டும் சிறையானர்

### சென்னையில் அந்தோனிப்பிள்ளை

யாழ்ப்பாணத்தை ஜனன ஊராகக் கொண்டவரும், இலங்கைச் சமசமாஜக்கட்சியின் பிரமுகர்களில் ஒருவரும் சென்னைத் தொழிலாளர் சங்கத் தலைவருமாய மிஸ்ரர் என். ஸீ. வி. அந்தோனிப்பிள்ளை சென்றசனிக்கிழமையிரவு, சென்னையில் மீண்டும் சிறையாக்கப்பட்டார்.

சென்னை ஆலைத்தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் பயனாக, மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை முன்னர்ச் சிறையாக்கப்பட்டுப் பின் பலவந்தமாகச் சென்னையிலிருந்தும் இலங்கைக்குச் சென்னை அரசாங்கத்தால் அனுப்பப்பட்டார். எனினும் அவருடைய மனைவி (பிலிப் குணவர்த்தனாவின் சகோதரி) சென்னையிலேயே இருந்து தொழிலாளர் இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்.

சென்ற சனிக்கிழமை மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை மீண்டும், சென்னை அரசாங்கத்தின் தடையுத்தரவை மீறி அங்கேசென்றார். அவர் அங்கே வந்தது கடைசிவரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அன்று பின்னேரம் குறித்த ஆலைத் தொழிலாளர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அப்போது மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை திடீரென்று அக்கூட்டத்தில் தோற்றினார். அவரைக்கண்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர் ஆனந்தத்தால் ஆர்ப்பரித்தனர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அக்கூட்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ
வைகாசிமீ" ௨௩௨ வெள்ளிக்கிழமை


## இந்திய விவகாரம்

"பூரண அங்கங்களோடு கூடிய ஒரு புதல்வனைப் பெறுவேனென்று பத்து மாசங்களாகக் கருப்பத்தைப் பேணிச் சுமந்த ஒரு பெண், பத்தாமாசம் நோக்காடுற்று அங்கவீனத்தோடுகூடிய இரு பிள்ளைகளைக் கவலையுடன் வருத்தப்பட்டு ஈன்றவாருயிற் றெனலாம் இந்தியாவிற்கு இப்போது கிடைத்திருக்கும் பூரண சுயராச்சிய முறை;பரதகண்டமாகிய இந்திய நாடு இப்பொழுது செய்யப்பட்டுள்ள ஒழுங்கின்படி இருபிரிவான பரிபாலனத்துட் படுவதாயிற்று; இதன் விபரங்கள் இற்றைப் பிரசுரத்தில் பிறிதோரிடத்தில் வெளியிடப்பெற்றுள்ளன.

பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் கொள்கையைப் பின்பற்றிஞல், அவர் இறுதியிற் சொன்ன பேச்சைக் கேட்டு நடந்தால் இந்தியா இப்படி ஒன்றேடொன்று மாறுபட்ட இரு பரிபாலனத்துள் அகப்பட்டு இடர்ப்படமாட்டாது; பண்டிதர் நேரு இச்சந்தர்ப்பத்தில் என்ன சொன்னர்? "முஸ்லிம் மக்களுக்கும் இந்துக்களுக்குமிடையே ஏதும் பிணக்கிருந்தால், மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தால், பாரத நாட்டிற்கு வரவிருக்கும் பெரும் நன்மையை உத்தேசித்து அவைகளை நாங்களிரு பகுதியாரும் பரஸ்பரம் பொறுமைபாராட்டி அறவே மறந்துவிடவேண்டும்" என்றல்லவா தெருட்டினர்; ஜின்னு செவியிலும் அவர் கூட்டத்தவர் செவிகளிலும் பண்டிதரின் இதோபதேசம் உள்ளபடி புகுந்திருந்தால் இந்தப் பெரிய பாரதநாட்டிற்கு இப்படியான நூதசுவராச்சியம் கிடைக்க நேராது; இந்தியா இந்துஸ்தான் பாக்கியத்தான் என இரண்டாக, ஜின்னுவின் பிடிவாதத்தாற் பிரிக்கப்பட்டதெனினும் ஜின்னுகேட்ட பாக்கிஸ்தான் இலலாதொழிய ஜின்னுவின்நோக்கத்திற்குப்பிரதிகூலமானதும் திருப்திகரமற்றதுமான ஒரு பாக்கியஸ்தானே இப்பொழுது அகப்படலாயிற்று; சுருங்கச் சொல்லுகில் ஜின்னு ஒன்றைநினைக்கத் தெய்வம் பிறிதொன்றை எண்ணிவிட்டதெனலாம்; இப்பொழுது இந்தியநாடுபிரிக்கப்படும் நிலைமையை நோக்கின் இந்து மக்களின் ஒற்றுமையின்றிப்பாக்கிஸ்தான் வாசிகள் அரசியல் விஷயங்களிலும்நல்வாழ்க்கையிலும் விருத்தியடைதல் கஷ்டமாகுமென்னலாம். ஆனல், "நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்"என்றுங்கு, ஜின்னுவும் அவர் கட்சியினரும் எந்தக் காலமும் வேற்றுமை பாராட்டினுலும், இந்திய மகாநாட்டினர் அவ் வேற்றுமைகளைப் பொருட்படுத்தாது, பொறுத்து ஒற்றுமை காட்டுபவர்களென்பது உலகப் பிரசித்தமாகும்; இவ்வரசியற்பிரிப்பில் இன்னும் நிச்சயித்து வகுக்கப்படவேண்டிய விவகாரங்கள் பலவுள; இவற்றுட்பிரதானமானது இந்திய சைநியம்; சில ஆண்டுகள் செல்வதற்கிடையில்இந்துஸ்தான் பாக்கிஸ்தான் என்ற பேதம் மெல்ல மெல்ல ஒழிந்துவிட, இந்தியா முழுவதும் ஒரே பூரண சுயராச்சியமாகு மென்பது பல அறிஞரின் நம்பிக்கை; ஆனல் ஜின்னுவின் மூளையில் இப்போதுதான் கவலை தொட்டிருக்கிறதெனச் சொல்லப்படுகிறது.

# கொழும்பிற் கலகம்

## டக்ரர் பெரீரா சிறை

கொழும்பு காலிபேஸ் மைதானத்தில் இருந்து கோலனுவைக்கு ஊர்வலம் ஒன்றை இட்டுச் செல்லும்போது டக்ரர் N.M.பேரீராசிறைப்படுத்தப்பட்டார். பொலிசார் ஊர்வலத்தைத் தாக்கியபோது டக்ரர் பேரீரா காயமடைந்தார். உடனே ஜனங்கள் கட்டுமீறி ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார் துப்பாக்கியாற் சுட்டனர். வைத்தியப்பகுதியில் கிளார்க்காகவுள்ள எம். கந்தசுவாமி என்பவர் குண்டுபட்டு இறந்தார். 18 பேர் காயமடைந்தனர்.

வேலைநிறுத்தம் செய்துள்ள 9 கிளார்க்குமார் சிறையாகினர். தொழிலாளர் வேலைநிறுத்தம் வேகுவாகப் பரவுகிறது. துறைமுகத் தொழிலாளரில் 100 க்கு 90 விகிதமானேர் வெளியேறிவிட்டனர். கொழும்பு முழுவதும் இராணுவர்காவல் நிகழ்ந்து வருகிறது.

### பிந்திய செய்தி

நேற்றுப் பின்னேரம் நிகழ்ந்த கலகத்தில் எல்லாமாக 32 பேர் காயமடைந்தனர் என்றும் அவர்களில் 16 பேர் ஆபத்தான நிலைமையிற் சிக்கின்றரென்றும் தெரிகிறது. வேலைநிறுத்தக்காரரில்ஒருவர், ஓர் பொலிஸ் சார்ஜன்ரை நோக்கிச் சுழல் துப்பாக்கியாற் சுட்டார் என்றும், அதன் பயனுகவே பொலிசார் பதிலுக்குச் சுட்டனர் என்றும் டி செய்தி தெரிவிக்கிறது.

# சேர்ச்சில்!

## அவரின் பிரபல்யம் குறைகிறது

யுத்தகாலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகவிருந்து ஹிட்லர், முஸோலினி என்பவர்களின் கொட்டத்தை அடக்கி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிய சேர்ச்சில் இன்று இங்கிலாந்தில் மதிப்பற்று இருக்கிருர் என்று ஓர் பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது.

சேர்ச்சில் நாட்டுக்கு நலம் புரிந்தவர்தான், ஆனல் அவர் இப்போதுள்ள நிலைமையில் ஜனங்களுக்குத் தலைமை வகிக்க லாயக்கற்றவர். ஆகமிஞ்சினுல், அவரை ஓர் புராதனசின்னம்போல மதிக்க பிரிட்டிஷ் மக்கள் தயார். அதற்கு மிஞ்சி அதிக மதிப்புக்கொடுக்க அவர்கள் தயாராகவில்லை என்று [illegible] பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது.

# உலகம் பலவிதக் கதை

(முற்றெடர்—17)

### பெண்ணை ஒருமுறை என்னுரப் பார்க்கவொண்ணுதா?

தலைவாசலிலே பேசிக்கொண்டிருந்த விஜயரத்தினம் உடனே இருக்கைவிட்டெழுந்து வீட்டினுட்போய் மீண்டுவந்தபோது பண "நோட்டு" ஒன்றை படித்தபடி கொண்டுவந்து "சும்மா இது இப்போதைக்கிருக்கட்டும்" என்று இதமாகச் சொல்லி நீட்ட, 'ஐயா, இப்போது இவைகளெல்லாம் ஏன், கருமம் நிறைவேறியபின் செய்யலாமே" என்று புறத்தே பணம் வாங்க விருப்பமில்லாதவன்போல் முருகேசன் சொல்ல, அப்படியல்லவென்று சொல்லி விஜயரத்தினங் கொடுக்க, அவன் நன்றிகூறி அப்பணத்தை ஏற்றுக் கொண்டான். பின்னரும் விஜயரத்தினம் முருகேசனைப் பார்த்து "இந்த விஷயம் நிறைவேறும்வரை இதனை எவர்க்கும் வெளியிட இஷ்டமில்லை; ஆனதால், நீரே என் கல்யாண விஷயத்தில் எனக்கு இயன்ற துணைபுரிய வேண்டும்" என்று கேட்க முருகேசன் "என்னுல் ஆகக்கூடியது எதனையும் மனப்பூர்வமாகச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றுன். சொல்லியபடியே முருகேசன் தாலிக்கொடி செய்விக்கும் விஷயத்திலும் கூறை முதலியன வாங்கும் விஷயத்திலும் தன்னுல் இயன்ற துணை புரிந்தான்; பொன்னுருக்குதல் விவாகமென்னுங் கருமங்களுக்கு இன்னின்ன சுபதினங்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும் முருகேசனே போய்ப் பெண்வீட்டாருக்குத் தெரிவித்தான்; அந்த நாட்களில் முருகேசனுடைய நேரம் அதிகமாக விஜயரத்தினத்தின் ஏவல்களையுங் கருமங்களையுஞ் செய்தலிலேயே கழிந்தது; இங்ஙனமாக, ஒருநாள் விஜயரத்தினம் ஆறுதலாக முருகேசனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவனை நோக்கி "முருகேசு, கேட்கிறேனென்று குறையெண்ணுதேதீர் அந்தப் பெண்ணை என்கண்ணுல் ஒருமுறை நான் நேரிற் பார்க்கவொண்ணுதா" என்று ஆவலுடன் கேட்டான்; "ஐயா, ஒருமுறை பார்ப்பதென்ன, விவாகமானவுடன் நீர் தானே கால்தொட்டுத் தலைபரிபக்கம் பலமுறையும் வைத்து இருகண்ணுரப் பார்க்கலாகும்" என்று முருகேசன் சொல்ல, "அது எனக்குத் தெரியும்; அப்போதல்ல, கல்யாணஞ் செய்யமுந்தி அக்கன்னிகையை ஒருமுறை தூரத்தில் நின்ருயினும் பார்த்துவிட விருப்பங்கொண்டேன்" என்று இரந்து கேட்டான்; "அதில் அதிக சங்கடமில்லை; பெண்பகுதியார் எவரேனும் அறியாமல் நீர் பார்த்துவிட்டால் நல்லது; அது முடியாவிட்டால், பெண்ணின் பெற்றுருக்கு மாத்திரந் தெரிவித்துவிட்டுப் பெண் தன்னை மாப்பிள்ளை பார்க்கப் போகிருரென்ற இரகசியத்தை எள்ளளவும் அறியாமல் வைத்திருக்க வேண்டும்; ஏதோ ஆகவேண்டியஉபாயத்தை நான் யோசிக்கிறேன்; அப்படிப் பார்த்தபின்புதான் கல்யாணத்திற்கு ஆகிய ஆயத்தங்களைச் செய்வதோ" என்று முருகேசன் கேட்க, "இல்லை, இல்லை, ஆயத்தங்கள் நடக்கட்டும்; பார்க்கவேண்டு மென்பது என் விருப்பமென்றதைத்தான், உமக்குத் தெரிவிக்கிறேன்" என்றுன் விஜயரத்தினம். 'அதற்காகிய முயற்சியைச் செய்கிறேன்" என்று மீளவுஞ் சொல்லிவிட்டு அநுமதிபெற்றுக் கொண்டுபோயினுன் முருகேசன்.

### தீராச் சந்தேகமுள்ளவர்

[illegible] அந்தப்பெண்ணைப்பற்றி எவ்வளவோ சொல்லியிருப்பவும், தன்னை நம்பாமல் விஜயரத்தினம் தானே பெண்ணை நேரிற் பார்க்கவேண்டுமென்கிருனே யென்பதை எண்ணியெண்ணி முருகேசன் சற்று மனவருத்தப்பட்டான்; "இந்த விஜயரத்தினத்தைப் போன்ற தீராச் சந்தேகமுள்ளவர்களும் உலகத்திலேயிருக்கிருர்களென்பது உண்மை; இவர்கள் உற்றார் உறவினர் மனைவிமக்கள் முதலிய எவரையும் நம்பார்கள்; ஒருவர் தம்மிடத்தில் எவ்வளவு விசுவாசம் வைத்து ஊடாடினுலும், இத்திராச் சந்தேகிகள் அவரிடத்தில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள், இப்படிப்பட்டவர்கள், வேதாகம புராணம் முதலாம் பழைய சாத்திரங்களை நம்பார்; சமயாசாரம், சாதியாசாரம் பெரியோர் வாக்கு, கொள்கை என்னுமிவைகளை நம்பார்; ஈற்றிலே தம்மைத்தாமே நம்பாதொழிவர்; திராச் சந்தேகமுற்ருருக்கு ஒரு காலத்தும் மகிழ்ச்சியில்லையென்று பஞ்சதந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது: சந்தேகமுடையாரிடத்திற் பூண்ட நட்பும் நிலைநிற்கமாட்டாது: கொண்ட குணத்தை மாற்ற யாரால் முடியும்? சரி, இதனுல் நமக்கென்ன கெட்டுப் போய்விட்டது' இந்த விஜயரத்தினம் நாளைக்கு அந்தப் பெண்ணை நேரிற் காண்பாணுயின், நான் சொல்லியதைக்காட்டிலும் கூடிய இலட்சணம் அக்கன்னிகையிடத்திருப்பக் காண்பானென்பது நிசம்; அப்போதாயினும் இவன் திருப்தியடைந்து என் மீது கொண்ட சந்தேகத்தையுந் தவிர்த்துவிடுவான்" என இப்படியெல்லாஞ் சிந்தித்துக்கொண்டு அவன் தன் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்; அன்றுபோக அடுத்தநாட்காலை முருகேசன் வேலாயுதன் வீட்டுக்குப் போய் அச் சம்பந்த விஷயமாகப் பல பேசிவிட்டு, மாப்பிள்ளைகொண்ட இந்த நோக்கத்தையும் வேலாயுதனுக்கு மெல்ல வெளியிட்டான்; வேலாயுதன் சற்றுநேரம் யோசித்துவிட்டு, "தம்பி, முருகேசு அதனுல் என்ன பிழை நேரப்போகிறது? விவாகம் நிச்சயமாய்விட்டதால், அந்த நேரந் தொடக்கம் எங்கள் மகள் அவருடைய பெண்டாட்டிதானே; ஆனுல், அவர் பெண்ணைப் பார்ப்பதென்பது இயன்றவரையில் இரகசியமாக இருக்கவேண்டும்; தாயறிந்தாற் சிலவேளை சம்மதப்படாள்: மகள்செய்தி தெரிந்தால் இலச்சை கொண்டு முற்பட்டு வர உடன்படாள்;" என்று சொல்லிப் பின்னரும் முருகேசனை நோக்கி, "பெண் பார்ப்பதென்றுல் எப்போதைக்கு" என்று கேட்க, இன்றிரவு 8மணிவரையில் நல்லநாள்; ஆனதால் அந்தநேரம் வைத்துக் கொள்ளலாமென எண்ணுகிறேன்" எனலும், வேலாயுதனும் "அப்படியே ஆகட்டும்" என்றுன்; முருகேசன் சந்தோஷமடைந்தவனுய், குறித்த நேரத்திற்குமாப்பிள்ளையோடு அங்கு வருவதாகச் சொல்லிவிட்டு, வேலாயுதனிடத்தும் அவன் மனைவியிடத்தும் விடை பெற்றுக்கொண்டு நேரே விஜயரத்தினம்வீட்டிக்குப்போனுன்;

### 'நீ நினைத்தால் முடியும்.'

போன முருகேசன், விஜயரத்தினத்தைக் கண்டமாத்திரத்தே, கவலையோடு கூடியவன்போல் நடித்துக் கொண்டு தலைவாசலில் இருந்தான்; அதனையவதானித்த விஜயரத்தினம் தானும் கவலைகொண்டானுய், "முருகேசு, நீர் வாடிய முகத்துடன் வந்திருப்பதற்கு ஏதுவென்ன? விவாகத்திற்கு ஏதும் இடையூறுண்டா?"என ஆவலுடன் வினவ, "அப்படியான இடையூறு ஒன்றுமில்லை; ஆனல்..." என்று சொல்வதற்கிடையில், "என்ன ஆனல்"என்றுபேராவலோடு மீளவும் கேட்டான் விஜயரத்தினம்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# பாகிஸ்தான் .... ஆனல்?

## தலையில்லாத முண்டமானது !

### அறிக்கை வெளியானது

அகில உலகும் எதிர்பார்த்த, இந்திய அரசியல் சம்பந்தமான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவான அறிக்கை சென்ற செவ்வாய்க்கிழமையிரவு 7 மணிக்கு இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன்பிரபுவினல் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. இந்தியா ஒரே ராஜ்யமாக விருந்து தனக்கும் உலகுக்கும் சிறந்த முறையிற் பயன் படுவதற்கு பிரிட்டிஷ் மந்திரிகள் தூதுக கோஷ்டி இந்தியாவுக்கு விஜயம் செய்து சென்ற ஆண்டு மேமாதம் 16ந் திகதி வெளிவிடுத்த அறிக்கையே சாலச்சிறந்தது. ஆனல், இந்தியத் தலைவர்களுக்கிடையே பரஸ்பரம் ஒற்றுமையில்லாதுவிட்டமையினல், அந்தத் திட்டத்தைக் கைவிடுத்து, 1948-ம் ஆண்டு ஜூன்மாதத்துக்கு முன் பிரிட்டிஷார் எப்படி அதிகாரத்தை இந்தியர்களுக்கு மாற்றிவிட்டு வெளியேறுதற்கான இன்னேர் திட்டத்தைக் கைக்கொள்ளுதல் அவசியமாயிற்றென்பதை இராஜப்பிரதிநிதி எடுத்துரைத்து, தாம் பதவியேற்றநாள் தொடக்கம் நாளிதுவரை, இந்தியத் தலைவர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்தச் செய்த முயற்சிகளைக் குறிப்பிட்டுக் கடைசியாகத் தாமும் பிரிட்டிஷ் மந்திரசபையும் வகுத்த திட்டத்தை இந்திய மாஜனங்கள் இந்த நிலைமையில் ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இன்னும் இந்தியா சீரும் சிறப்பும் பெறத் தமது நல்லெண்ணமும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் என்றும் கிடைக்கும் என்று முடித்தார் இதன்பின் பண்டிதர் ஜவஹர்லால் நேரு மகமதலி ஜின்னு, சர்தார் பல்தேவ் சிங் என்பவர்கள் ரேடியோமூலம் பேசினர்.

●

### புதிய திட்டம்

பிரிட்டிஷ் அரசாங்கம் இப்போது வெளியிட்டுள்ள புதிய திட்டத்தின் அம்சங்கள் வருமாறு:

1 1948ம் ஆண்டு ஜூன்மாதத்துக்கு முன் பிரிட்டிஷார் நிச்சயமாக வெளியேறுவர்.

2 பிரிட்டிஷ் இந்தியா (அதாவது பிரிட்டிஷ் பரிபாலனத்துக்குட்பட்ட) இருகூறாக வகுக்கப்படும். ஒன்று ஹிந்துஸ்தான, மற்றது பாகிஸ்தான்.

3 ஹிந்துஸ்தானில் சென்னை, பீகார், ஒரிஸா, பம்பாய், அஸாம், ஐக்கியமாகாணம், மத்தியமாகாணம், மேற்கு வங்காளம், கிழக்குப் பாஞ்சாலம் என்பன அடங்கும்.

4 பாகிஸ்தானில் சிந்து, கிழக்கு வங்காளம், மேற்குப் பாஞ்சாலம் என்பன அடங்கும்.

5 எல்லைப்புறமும் பலுக்கிஸ்தானமும் பாகிஸ்தானுடன் சேர்வதா, ஹிந்துஸ்தானுடன் சேர்வதா என்ற பிரச்சினை, ஓர் பொதுஜன வாக்கெடுப்பு மூலம் நிர்ணயிக்கப்படும்.

6 அசாமில் உள்ள வில்கெற்பகுதியில் பெருந்தொகையான முஸல்மான்கள் வசிக்கின்றார்கள். இவர்கள் பாகிஸ்தானிற் சேர விரும்பினல், அதற்கென அப்பகுதி மக்களிடையே ஓர் பொதுஜன வாக்கெடுப்பு நிகழும்.

7 இன்னும் 8 வாரத்துக்குள், இந்தியாவுக்கு (தனிப்பட்ட இந்தியாவுக்கு அல்லது பிரிக்கப்பட்ட இந்தியாவுக்கு) குடியேற்றநாட்டந்தஸ்தாகும் சுயராஜ்யமும் கொடுக்கப்படும்.

●

### இலாபநட்டம்

பிரிட்டிஷ் அரசாங்கம் இப்போது அளித்துள்ள தீர்ப்பின்படி யாருக்கு நட்டம்? ஜின்னுவும்லீக்கரும் தமக்குப்பாகிஸ்தான் கிடைத்துவிட்டது என்று மனத்தைச் சாந்திப்படுத்தலாம்; ஆனல் அந்தப் பாகிஸ்தானல் எந்தவிதமான நன்மையை முஸல்மான்கள் அடையப்போகிறார்கள்? கிழக்குப் பாஞ்சாலமும், மேற்கு வங்காளமும் இல்லாமல், பொருளாதார விஷயத்தில் மிகவும் பிற்போக்குடைய பிரதேசங்களைக் கொண்ட இப்பாகிஸ்தான் ஈற்றில் முஸல்மான்களுக்குக் கெடுதியாக முடியுமேயொழிய ஓர்போதும் நன்மைகொடுக்கமாட்டாது; இந்தவிதமான பாகிஸ்தானைத் தாம் தருவதற்குத் தயார் என்று காங்கிரஸ் எத்தனையோ மாதங்களுக்கு முன் ஜின்னுவுக்குக் கூறியது. "இத்தலையில்லா முண்டம் எங்களுக்கு வேண்டியதில்லை; 6 மாகாணங்களையும் அப்படியே பிரிக்காமல் கொடுக்கவேண்டும். அது மாத்திரமன்றி இரண்டு பாகிஸ்தான் பிரதேசங்களையும் இணைக்கும் ஆயிரம் மைலுக்கு மேற்பட்ட இடைப்பாதையும் தரவேண்டும்; இல்லையேல் சும்மா விடுவேனு பார்" என்று வீரம்பேசிய ஜின்னு இன்று அதே தலையில்லா முண்டத்தை—செத்துப் பிறந்த சிசுவை—வைத்துக் கட்டியழுகிருரே! அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவள் கிலமாக, ஜின்னு இங்கிலாந்தில் உள்ள சேர்ச்சிலின் கன்ஸர்வேற்றிவ் கோஷ்டியையும், இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் தேவதைகளையும் நம்பி, காங்கிரசின் ஆதரவை, ஒத்துழைப்பை உதறித் தள்ளிவிட்டு ஈற்றில் இன்று ஓலம் போடுகிறார். இவர் எவ்வளவு தூரம் ஏமாந்துவிட்டார் என்பது ஜின்னு அன்று ரேடியோமூலம் பேசிய பேச்சிலிருந்து புலனுகின்றது.

●

### மீண்டும் ஜம்பம்

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடைசி

தொடர்ச்சி 4ம் பக்கம்

# வேலை நிறுத்தம் ஒழியுமா?

## நிலைமை அபிவிருத்தி யடைகிறது

அரசாங்கக் கிளார்க்குமார் வேலைநிறுத்தம் மெல்ல மெல்லவாய் ஒழியும் நிலைமையில் இருக்கிறது என்று செய்திகள் கூறுகின்றன. நேற்றைத் தினம் கொழும்புக் காரியாலயங்களில், வேலை நிறுத்தம் செய்த கிளார்க்குமார் ஒவ்வொருவராகத் தம் காரியாலயங்களுக்குப் போய் வேலை செய்கின்றனர் என்றும் வெளியே நிற்பவர்கள், வேலைநிறுத்தக்காரரின் பயமுறுத்தல்களினலேயே அப்படி நிற்கின்றனர் என்றும் ஓர் செய்தி கூறுகின்றது.

கொழும்புத் தபாற்கந்தோரதிபர்களில் ஓர்கட்சி செய்த வேலை நிறுத்தம் மங்கிவிட்டது. இதனல் தபாற்கந்தோர்ப்பகுதி எவ்விதத்திலாவது பாதிக்கப்படவில்லை என்று தபாற்பகுதித் தலைவர் தெரிவிக்கிறார்.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம் கச்சேரியில், சென்ற செவ்வாய்க்கிழமை பின்னேரம் தொடக்கமாக வேலைநிறுத்தஞ்செய்த கிளார்க்குமார் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டனர். கச்சேரியில் வேலை வழக்கம்போல் நடந்து வருகிறது. பொலிஸ்தானத்தில் ஒன்றிரண்டுபேரைவிட மற்றும் கிளார்க்குமார அனைவரும் வேலைசெய்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் மற்றும் பகுதிகளிலும் நிலைமை திருப்திகரமாகவிருக்கிறது.

### இன்றைய மகாநாடு

அரசாங்கசபை அங்கத்தவர்கள், மந்திரிமார் என்பவர்களின் மகாநாடு ஒன்று இன்று பிற்பகல் அரசாங்கசபைக் கூட்டத்தில் நிகழும் என்று தெரிகிறது. இப்போதுள்ள வேலைநிறுத்த நிலைமை, இதனை எப்படிச் சமாளிக்கலாம், இதனைச் சமாளிப்பதற்கு ஊரவர்களின் ஒத்துழைப்பை எவ்வாறு பெறலாம் என்னும் இன்னேரன்ன விஷயங்கள் இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

### புதிய அரசியலுக்கு விரோதமானது

இப்படியான வேலை நிறுத்தங்களினல் மந்திர சபையினர்க்குக் கொடுக்கும் ஒவ்வொரு அடியும் புதிய அரசியற்றிட்டத்துக்கு அளிக்கும் அடியாகும் என்ற டக்டர் கொல்வின் R டீ. சில்வா சென்ற சனிக்கிழமை கொழும்பு கால்பேஸ் மைதானத்தில் நிகழ்ந்த ஓர் பெரிய கூட்டத்திற் கூறினர். இலங்கை மக்களின் உரிமைகளை மறுத்து அவர்களை அடக்குமுறைச் சட்டங்களினல் வருத்திவரும் மந்திரசபையினர்க்கு ஓர் பாடம் படிப்பிப்பது இலங்கை மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும் என்று மிஸ்ரர் வேர்ணன் குணசேகரா என்னும்சமசமாஜக்கட்சியங்கத்தவர் கூறினர்.

# அன்னையே வருக!

( ஸ்ரீ பெரியசாமி மொழி பெயர்ப்பு )

வருக அன்னய் வருக பயங்கர நாமினீ வருக
மூச்சினில் சாவினை மூட்டிடும் தேவியே
அடிமலர் அதிர்ச்சியில் அண்டம் பொடிபடக்
காலகாலி நீ வருக வருக அன்னய் வருக!
மிடிமையைத் துணிவுடன் விரும்புவோன் - சாவினைத் தழுவு[வோன்-
ஊழிக் கூத்தினில் உளமகிழ்ந்தாடுவோன் -
அவனையே தேடி அன்னை வந்திடுவாள்.

— சுவாமி விவேகானந்தர்

# எனது இலங்கை விஜயம்

( "கோவை கிழார்" )

இலங்கைக்கு அழைப்பு வந்தது. ஒத்துக்கொண்டேன். முந்தி கடல் கடந்த தமிழரைக் கண்டு அறிந்து எழுதினது நினைவிற்கு வந்தது. மீண்டும் அவர்களைக் கண்டு அளவளாவி இருக்கவேண்டும் என்ற ஆர்வம் வாராதா? மேலும் நண்பர் 'சிவக்கவிமணி' அவர்கள் என்னை இட்டுச் செல்லவேண்டுமென்ற ஆர்வமும் நட்பும் உடையவர். அவர் பேச்சுக்கு எதிர்மொழி உரைக்க இடமில்லை. ஆகவே புறப்படுவதற்கு நிச்சயித்தேன். பேசும் பேச்சுகளுக்கு தலையங்கங்களும் கொடுக்கப்பட்டன. பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டதாகத் தகவலும் கிடைத்தது. சைவர் மகாநாட்டிற்கு மட்டும் செல்வதற்கு எனக்கு இச்சை இல்லை; மற்றும் சிலநாள் தங்கி சைவத்திற்குத் தொண்டுபுரிய வேண்டுமென்ற அவா இருந்தது. அதற்கும் வகை ஏற்படுத்துவதாக தகவல் வந்தது. மகிழ்ச்சியடைந்தேன்; எனது நண்பருடன் புறப்பட்டேன்.

மதுரை பழைய மதுரையே. ஆனல் அங்கே பணப் பெருங்கமும் ஜனப்பெருக்கமும் கூட இருந்தது. அங்கயற்கண் அம்மை கோயிலுக்குள் எப்படி இருக்குமோ என்று எண்ணினேன். தற்கால அரசியல் இயக்கத்தினல் கோயில் நுழைவு இங்கு ஏற்பட்டது அதனல் வழக்குகளும் பெருகின. ஆனல் மக்களிடம் அது எதுவரைக்கும் ஒத்துக்கொள்ளப்பட்டதோ என்று அறிய விரும்பினேன். ஆலயம் சென்றேன் அன்பர்கள் கூட்டத்திற்குக் குறைவில்லை. கல்லாதாரும் கோயிலைப் பார்த்திராத மக்களும் உள்ளே இருந்தார்கள். மிகவும் அன்புடன் இருந்தார்கள். ஆனல் ஒருவர் முகத்திலும் தெளிவில்லை. ஆசாரமும் குறைந்திருந்தது இன்னசெய்வதென்பது அறியாத திகைப்பு இருந்தது. கோயில் நுழைவுமட்டும் போதாது. அகத்தில் ஒளி திகழவேண்டுமல்லவா? அதற்கு என்ன செய்யப்பட்டது?

ஆலயத்தில் சில மாறுதல்கள் கண்டேன், அவை திருப்தியளிததன மக்களுக்கு அறிவிக்கக்கூடிய மாறுதல்கள் இன்னும் பல செய்தல்வேண்டும். சங்கத்தார் கோயில் தெளிவாக வைக்கப்படவில்லை. வெள்ளியம்பலம் வெள்ளியால் வேயப்படவில்லை. அதற்குள் மாறிஆடின திருவுருவம் ஏன் வைக்கப்பட்டுள்ளதோ. இவ்வாலயத்தின் சரிதம் இதுவரை ஆராயப்படவில்லை. ஆயிரக்கணக்கானகல்வெட்டுகள் இருந்தும் அவைகளை படியெடுத்து பதிப்பிக்கப்படவில்லை. இவை முதலான குறைகள் எப்போது நிறைவேறுமோ?

மறுநாள் மதுரை விட்டுப் புறப்பட்டோம், இருப்புப் பாதைக்கு இருபுறமும் பெருத்த வெள்ளம் காணப்பட்டது திருவருளினல் அன்றையநாள் வண்டி நேராகப் புறப்பட்டது. அன்பர்கள் உதவி பெரும் பயனைத் தந்தது. வண்டியிலும் படகிலும் யாதொரு தடையுமின்றி மேல சென்றோம். மறுநாள்காலை யாழ்ப்பாணம் அடைந்தோம், அன்பர்கள் எங்களை வரவேற்றார்கள். அங்குள்ள சைவ மக்களின் அன்பு கூறவொண்ணுதது அவர்கள் முகப்பொலிவே அதனை எடுத்துக்காட்டியது.

எங்களுக்கு என்று ஒதுக்கி வைத்திருந்த கட்டடம் வெகுவசதியாக இருந்தது. வாயிலில் இயற்கை விதானம் இட்டாற்போல நான்கு பெரிய மாமரங்கள் குளிர்காற்றைத் தந்தன. கோடைக்கால உணர்ச்சி சிறிதும் தோன்றவேயில்லை அதனைஎங்கும் அமைத்திருந்த வேறு வசதிகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? யாழ்ப்பாண நண்பர்கள் சைவத்தில் வைத்திருந்த அழுத்தமான அன்பே எல்லா வசதிகளையும் செய்வித்தது என்பேன்.

அன்று உணவு அருந்தி இளைப்பாறின பிறகு வீட்டு முதல்வர் 'கடற்புறமாக உலாவச் செல்வோம்' என்றார். எனக்கு அதில் வெகு பிரீதி. உடனே ஒத்துக்கொண்டேன். யாழ்ப்பாணக் கரையிலிருந்து மேற்குத் தீவுகளுக்குச் செல்லுவதற்காக இணைந்துவரும் பாதைவழியாகச் சென்றோம் பல ஆடவர்களும் மங்கையர்களும் நல்ல உடை உடுத்துக்கொண்டு காற்று வாங்கச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் சைவர்களும் விவிலியர்களும் இருந்தார்கள். எனக்கோ பேதம் தெரியவில்லை. ஆனல் யாழ்ப்பாண நண்பர் அறிவித்தார். திரும்பிவருகையில் ஓடம் ஏறிவந்தோம். பாய்மரம்விரிக்கப்பட்டது. ஜில்லென்று காற்று அடித்தது. மாலையில் இனிமையான அனுபவம பெற்றோம். இதனை எப்போதும் மறக்கவியலாது. படகோட்டியைப் பாடச்சொன்னேன். அவன் பாடவில்லை. கப்பல் பாட்டு பாடியிருந்தால் இன்னும் இன்பம் அதிகமாய் இருக்கும்.

பிறகு விசைவண்டியில் ஏறி நல்லூர் சென்றோம். கந்தகோட்டத்திற்கு அருகில் இறங்கி நன்னீரில் கைகால்முகம் அலம்பினேம். ஆலயம் பழைமையானது மிகவும் புனிதமாக வைக்கப்பட்டுள்ளது. முருகப் பெருமானைத் தரிசித்து வணங்கினேம். நடுயாமப் பூஜை எட்டுமணிக்கே நடந்தது அதனைக் கண்டுவிட்டே திரும்பினேம். ஒரு அன்பர் உருக்கமாகத்திருப்புகழ் பாடினதைக் கேட்டு மகிழ்ந்தேன். பள்ளியறை விழா எட்டரை மணிக்கு முடிந்தது. 'விரைவில் உறங்கி விரைவில் விழித்துக்கொள்ளுதல் நன்மை தரும்' என்பது ஆங்கிலப் பழமொழி. இதனை முருகக்கடவுள் அனுசரிக்க வேண்டுமென்பது இந்தக் கோயிலார் நோக்கம்போலும். மேலும் தீபாராதனை செய்தவுடன் தீபத்தை அணைப்பதற்கு வாயினல் ஊதுதல் ஒருசுலபச்செயல் என்று இவ்வாலயத்துப் பணிவிடையாளர்கள் அறிந்திருக்கிறார்கள்.

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலையில் திரு நாவலர்பாடசாலைக்குச் சென்றேம். அங்கே பூரண கும்பத்துடன் வரவேற்பு நடந்தது. தேவாரம்ஓதப்பட்டது. நாவலர் தளியில் வணக்கம் செய்யப்பட்டது. பிறகு குதிரைச் சகட்டிலே ஏற்றிக்கொண்டு ஊர்கோலமாகத் தமிழ்க் கலாசாலைக் காவணத்திற்கு எங்களைக் கொண்டு சென்றார்கள். காவணம் அடைந்ததும் சைவமகாநாடு தொடங்கிற்று. கூத்தாடும் தேவருக்கு ஆராதனை செய்யப்பட்டது. தேவாரம் ஓதப்பட்டது. திரு அருளம்ப

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது இலங்கை விஜயம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

லம் அவர்கள் அவையோரை வரவேற்றார்கள். 'சிவக்கவிமணி'யவர்கள் தலைமைவகித்தார்கள். தலைமையுரை வெகு ஆர்வத்துடன் சொல்லப்பட்டது. திரு முருகேசு அவர்கள் 'தசகாரிய விளக்கம்' என்பதைப் பற்றிப் பேசினார்கள். மிகுதியாக மேற்கோள்களை கூறவதில்லை என்று சொல்லிவிட்டு நூற்றுக்கணக்காக எடுத்துரைத்தார்கள். ஒருவிதமான இசையுடனே உரைநடையையும் அவர் சொன்னதைக் கேட்டு வியப்படைந்தேன்; இந்நாட்டில் புராணபடனர்கள் இவ்விதமாக இசையைப்போற்றுவார்கள் என்று கேள்விப்பட்டேன். ஏனையோர்கள் இவ்வித இசையை கையாடவில்லை; இவ்வாறு தொடங்கிய மகாநாடு மூன்று நாட்கள் நடந்தன.

மகாநாட்டில் நடந்த ஒவ்வொரு பேச்சைக்குறித்தும் குறிப்புக்கள் எழுதவேண்டியதில்லை. இரண்டுபெண்மணிகள் சுவைபொருந்திய ஆராய்ச்சி உரைகள் நிகழ்த்தினார்கள். சிவக்கவிமணி அவர்கள் தலைமையுரை குறிப்புரை போகலாக மூன்று தனிப் பேச்சுகள் நிகழ்த்தினார்கள் நான் இரண்டாவதுநாள் தலைமைவகித்ததன்றி இரண்டு பேச்சுகளும் பேசினேன். பலதீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகள் பெரும்பாலும் சமயக்கல்வி சம்பந்தப்பட்டவை. விவிலிய சமயத்தார் செய்துவரும் இடையூறுகளை எடுத்துரைத்து அவைகளைத் தாக்கிப் பேசினார்கள். இந்நாட்டில் சமயக் கொடுமை பிற சமயத்தாரால் ஏன் செய்யப்பட்டு வருகிறதோ என்று அறியமுடியவில்லை.

மூன்றாம்நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 'காரவெட்டி' என்ற ஊருக்குக் கொண்டு போகப்பட்டோம். நடுவில் வண்டியை ஓரிடத்தில் நிறுத்தி எங்களை வாத்திய கோஷத்துடன் நடத்திக்கொண்டு சென்றார்கள். வழியில் ஒவ்வொரு வீட்டின் முன்னிலையிலும் பூர்ணகும்பம் திருவிளக்கு தாம்பூலாதிகள் வைத்து வரவேற்றார்கள். இரவு வெகுநேரமாகியும் இவ்விதமான வரவேற்பு கண்டு இவர்கள் ஆர்வம் எத்துணையோ என்று அகமகிழ்ந்தோம். அந்த வரவேற்பு ஒருகல் தூரம் என்று சொன்னது மூன்றுகல் தொலைவாக ஆயிற்று. எங்கள் பேச்சுக்களை வெகு அமைதியாக அவ்வூர் மக்கள் கேட்டார்கள்.

மறுநாள் தெல்லிப்பழையிலிருந்து எங்களுக்கு அழைப்பு வந்தது. மகாநாட்டில் பேசிய ஒரு அம்மையார் அவர்களும், அவர்களுடைய தமக்கையும், கணவனார் கல்வி அதிகாரியும், எங்களுக்குச் செய்த வரவேற்புஎழுதவொண்ணாதது. அன்றுகாலை கீரிமலைக்குச் சென்று அங்கே அமைந்துள்ள அழகிய திருக்குளத்தில் நீராடிவிட்டு சிற்றுணவு அருந்தி அளவெட்டிக்குச்சென்றோம். அங்கே வாசகசாலையில் குளிர்ந்த பவனத்தில் 'சேக்கிழார்' தமிழ்க்கலை' என்ற பொருள்கள்பற்றி பேசினோம். அன்று மாலை தெல்லிப்பழைக் கலாசாலையில் 'சம்பந்தர்', சமய நிலையங்கள்' என்ற பொருள்பற்றிப் பேசினோம். ஏழாலை படத்தைத்தரிசித்துவிட்டு ஊர் திரும்பினோம்.

மறுநாள்காலைசெவ்வாய்க்கிழமையன்று எங்களை காரைதீவிற்கு அழைத்தார்கள், குறித்த நேரத்தில் புறப்படமுடியவில்லை. கந்தோர்களுக்குச் சென்று பயணச் சீட்டுகளைப் பெறுவதற்கு நடுப்பகல் ஆகிவிட்டது. பிறகு பன்னிரண்டு மைல் தூலைவில் உள்ள காரைநகருக்குச்சென்றோம். காலை எட்டுமணிமுதல் எங்களுக்காக நடுப்பகல் வரைக்கும் காத்துக்கொண்டிருந்த மக்கள் ஆண்பெண் குழந்தை உள்பட எல்லாருடைய பொறுமையை என்னவென்று சொல்லுவது! பிறகுதான் கூட்டம் தொடங்கியது. நீதிமன்றத்தில் உயர்ந்தபதவியடைந்து திடீரென்று சிவனடியடைந்த திரு நடராஜா அவர்கள் இந்நகரத்தாரே. அவருடைய காலகதியை ஒட்டி ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. பிறகு 'குறிக்காள்', 'சமயக்கல்வி' என்ற பொருள்கள் பற்றி நாங்கள் பேசினோம். யாழ்ப்பாணம் திரும்பி உணவருந்தியதும் பரமேசுவரன் கலாசாலை, இராமநாதன் கலாசாலை என்ற இரண்டு கலாசாலைகளையும் பார்வையிட்டு மகிழ்ந்தோம். எங்களை அங்கு அழைத்து வரவேற்ற கலாசாலை தம்பதிகளான தலைவர் தலைவிகளின் ஊக்கத்தையும் ஆர்வத்தையும்பற்றி எழுத்தினால் எழுதமுடியாது. அன்றுமாலை எனது நண்பர் 'சிவக்கவிமணி' அவர்கள் எங்கள் ஊருக்குப் புறப்பட்டுவிட்டார். நான்மாத்திரம் யாழ்ப்பாணத்தில் தனியே தங்கிவிட்டேன்.

—வரும்

## பாகிஸ்தான்...ஆனால்?

3ம் பக்கத் தொடர்ச்சி

யான இத்திட்டத்துக்கு அங்கீகாரம் கொடுத்துள்ள ஜின்னா, விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்றவன்வாருக. தன் ரேடியோப்பேச்சில் தன்னில் ஒரு பொறுப்பும் வைக்காமல். எல்லாம் முஸ்லிம் லீக்கின் டாராளுமன்றத்தில்தான் தங்கியிருக்கிறது. அது வருகிற திங்கட்கிழமை 9ந் திகதி கூடும் என்று வழவழா நியாயம் பேசினார். என்செயலாய்! பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தின் உதவியினால் ஜின்னா உச்சாணிக்கிளையில் ஏறினார். அங்கிருந்து கீழேஇறங்க அவர் இசையவில்லை. ஆனால் இன்று அதே பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் அந்த உச்சாணிக்கிளையிலிருந்து அவரை ஈவிரக்கமின்றித் தள்ளிவிட்டது

●

### நேருவின் வீரப்பேச்சு

பண்டிதர்நேரு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடைசித் திட்டம் சம்பந்தமாகப் பேசிய பேச்சு தனிச்சிறப்பு வாய்ந்தது. "தனிப்பட்ட இந்தியாவே, ஒரே இந்தியாவே எங்கள் லட்சியமாகவிருந்து மட்டற்ற தியாகங்களை ஆற்றினோம். அப்படி ஒரே இந்தியாவாக இருந்தால் எங்கள் ஆரியநாடு சீருஞ் சிறப்பும்பெற்ற உலகில் உன்னத ஸ்தானம் வகிக்கும் என்று நாங்கள் தொண்டாற்றினோம். ஆனால் எங்களுக்கிடையேயுள்ள அபிப்பிராயபேதங்காரணமாக அது முடியவில்லை. எனவே இப்போதைக்கு, நிலைமைக்குத் தக்கதாக எம் கருமங்களை அமைத்து ஆற்றுவோமாக. ஆனால் கூடியசீக்கிரம் எங்கள் அபிப்பிராயபேதங்கள் யாவும் மறைந்து, பாரதநாடு மீண்டும் ஒன்றாகிய உன்னதநிலை அடையும்" என்று அவர் கூறி, பாரத சுதந்திரத்தின் பொருட்டு அவதரித்த காந்தியடிகளை நினைத்துத் தம் நமஸ்காரத்தைச் சமர்ப்பித்தபோது கேட்டோர் அனைவரும் மயிர் சிலிர்த்தனர். ஈற்றில் ஜெய்ஹிந்த் கோஷத்துடன் தம் பிரசாரணத்தை முடித்தார். அவருக்குப் பின் பேசிய சீக்கியத்தலைவர் சர்தார் பல்தேவ் சிங், நேருவின் பிரசாரணத்தையே தழுவிப்பேசி, ராணுவத்தினர்க்குத் தம் உதவியையும் ஆதரவையும் அளித்தார். இனியும் பாரதநாட்டிற் கலகங்களுக்கு இடமில்லை. அப்படி ஏதும் கலகம் நிகழுமானால் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனையும் அவர் எச்சரித்தார்.

## திருச்சி ரேடியோ

**சனி யூன் 7**

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 கமலா நாகநாதன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சூர் எம் லட்சுமி பாட்டு 8-30 சித்ரகானம் 9 முடிவு.

1 கமலா நாகநாதன் வயலின் 1 20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குரல்வகை இசைத்தட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 திருச்சூர் எம் லட்சுமி பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 எம் சுப்பிரமணிய முதலியார் பாட்டு 5-40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் சுப்பிரமணியமுதலியார் பாட்டு 7-15 ராணுவத்திலிருந்து விலகியவர்களுக்கு 7 30 தமிழில் செய்திகள் 7-45 சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 பிரிவு நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9.45 வி வேணுகோபால்கிளாரினெட் 10 இசைவேளை 10-30 முடிவு

**ஞாயிறு யூன் 8**

காலை 7-15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 எம் கே கோபால பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்யம் 8-30 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 9 முடிவு.

12 கதம்பம் 12-30 காதல் இன்றேல்? நாடகம் 12-40 வண்ணச்சிறகு 12.45 ஆலாரம் டைப்பிஸ் நாடகம் 12-55 மோஹினி இசைக்கனவு 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு

மாலை 5 டி கே நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 எம் கே கோபாலபாகவதர் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 மாயவரம் எஸ் ராஜரத்ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 தில்ரூபா பியானோ 10 இசைவேளை 10-30 முடிவு.

**திங்கள் யூன் 9**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஏ கே ராஜூ நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஏ ஜி செல்வம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 ஏ கே ராஜூ நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே ஜோஸப் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 பெண்களுக்கே வறுமை 8-05 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 8-30 கே ஜோஸப் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தந்தி இசை 10 என் வி வசந்தகோகிலம் இசைத்தட்டு 10-15 குழலிசை இசைத்தட்டு 10 30 முடிவு.

**செவ்வாய் யூன் 10**

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 திருச்சி எஸ் கமலாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல்வகை இசைத்தட்டு 8-30 டி பி சிவசங்கரம்பிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி பி சிவசங்கரம்பிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 டி பி சிவசங்கரம்பிள்ளை புல்லாங்குழல் 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 திருச்சி எஸ் கமலாம்பாள் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7-45 பாலக்காடு ராமபாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தென்னிந்திய பாடல்கள் 10 நீங்கள் கேட்டவை 10 30 முடிவு.

## மீண்டும்சிறையானார்

1-ம் பக்கத் தொடர்ச்சி

டத்திற் பேசியதும் மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை பேசினார் அவர் பேசிக்கொண்டிருந்தபோது ஓர் பொலிஸ் அதிகாரி அங்குத்தோன்றி அவரைச் சிறைப்படுத்தினார். இதன் பயனாகக் கூட்டத்திற் குழப்பம் ஏற்பட்டது. நிலைமையைச் சமாளிக்கப் பொலிசர் சிலமுறை துப்பாக்கியாற் சுட்டனர் என்றும் பலர்காயமடைந்தனர் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

மிஸ்ரர் அந்தோனிப்பிள்ளை பொலிஸ்காவலில் எங்கோ ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

குறித்த கூட்டத்தில் நிகழ்ந்த கலவரத்தில் 30 பொலிசாரும் காயமுற்றனர் என்று சொல்லப்படுகிறது.


## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்



ஆங்கில எஸ். எஸ். ஸீ. ( S. S. C. ) வகுப்புக்குரிய

## சமயபாடங்கள்

1. சைவத்திருநெறித்தோத்திரத்திரட்டு
   இதன்கண் மேற்படி வகுப்புச் சமய பாடமாக விதிக்கப்பெற்ற தேவார திருவாசகப் பதிகங்கள் முழுவதும் அடங்கியுள்ளன — சதம் 75
2. திருவருட்பயன்
   பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரமவர்கள் செய்த விளக்கவுரையுடன் — சதம் 75
3. திருக்குறள் பத்து ( 25—34 ) அதிகாரங்கள்
   நூலாசிரியர் வரலாறு பதவுரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு முதலியவற்றுடன் சதம் 75
4. சமயகுரவர், சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் — அச்சில்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை



## விசித்திர விஸ்வகர்மாச் சித்திரம்

கண்கவரும் காட்சிவிருந்து அளிக்கும்

மாட மாளிகை வடிவச் சிகரமும்

வானத்தில் மின்னும் வெள்ளிகள்போன்ற மின்சார வெளிச்சமும்

புதிதாய் நயமாய் புனிதமாய் அமைக்கப்பெற்றது

திருவிழாக்களுக்கும் கல்யாணப் பந்தர்களுக்கும் களியாட்ட முன்றில்களுக்கும்

அழகும் அலங்காரமுஞ் செய்ய உபயோகப்படுகின்றன

எம். சுப்பிரமணியம்,
மரமாளிகை, மல்லாகம்,
(தெல்லிப்பழை)

Mis 50 6&10 6-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

"பெண்பிள்ளையை மாப்பிள்ளை விவாகமாதற்கு முந்திப் பார்க்கும் விஷயத்தைபிட்டு அவர்களுடன பேசினேன்; பெண்ணின் தகப்பனைச் சம்மதப்படுத்தலாய்; ஆனல் தாயை உடன்படச் செய்வது சற்றுச் சங்கடமபோற் காணப்படுகிறது" என்ருன் முருகேசன்; 'தகப்பனுக்குச் சம்மதமானல் தாயும் பெண்ணும் மாத்திரம் அறியாதபடி நாங்கள் போய்ப் பெண்ணை மெல்லப் பார்த்துக்கொண்டு வரவொண்ணுதோ, முருகேசு, நீ நினைத்தால் முடியும்" என்று சொல்லிவிட்டு, விஜயரத்தினம் உடனே வீட்டறையுட் சென்று கையிற் பொத்திப்பிடித்தபடி மீண்டு வந்து ஒருதொகைப்பணத்தை முருகேசனகையுள்வைத்துத் தன்பற்கள் தோன்ற இரந்தான், "சரி, ஏதோ பார்ப்போம்; போவதானல் இன்றிரவு எட்டுமணி வரையிற்ருன் பெண் வீட்டிற்குப் போகவேணும்; போய்ப் பார்ப்போம்; இதற்கிடையில் ஆகவேண்டிய உபாயத்தை நான் செய்கிறேன்" என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு முருகேசன் தன்வீட்டிற்கு மீண்டான். விஜயரத்தினம் அன்று இரவு எட்டு மணியாதற்கு இன்னும் நீண்டமணித்தியாலங்கள் இருக்கின்றனவேயென்று மனஞ்சோர்ந்தான்; ஆனலும போகும்போது தன்னை நன்கு அலங்கரிக்க வேண்டுமென்ற நோக்கத்தினல் அவன் தன்னை அலங்கரிக்கும் வகையைப்பற்றி நீடித்த நேரஞ் சிந்தித்துக்கொண்டிருந்தமையினல் அன்று பகற்போது ஒருவாறு நீங்கிமணி ஆறுதலும், முருகேசன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு விஜயரத்தினம் தன்னை அலங்காரஞ் செய்யத்தொடங்கினன்; சௌள கருமத்தைப் பகற்பொழுதே முடித்துக்கொண்டான்; இரவு 7 மணியாதலும் முருகேசனும் அங்கு வந்து சேர்ந்தான்; இதற்கிடையில் விஜயரத்தினம், முழுவதும் வெண்ணிறத்தோடு கூடிய ஐரோப்பிய உடைதரித்து, மூக்குக் கண்ணுடியை மாட்டினன்; சுகந்தப் பொருளைத் தன்னுடம்பிற் பூசவேண்டிய இடங்களிற் பூசினன்; மீசைக்கு மையிட்டு அதனை யொழுங்கு படுத்தினன்; முந்தியே சுகந்தமூட்டப்பட்ட சிறு பட்டுத்துணி யொன்றைச் சட்டைப் பையுட் புகுத்தினன்; அறையிலுள்ள நிலைக்கண்ணுடி முன்னின்று தன்னழகைத் தானே பார்த்து மெச்சியதோடமையாது, பக்கலில் நின்ற முருகேசனைப் பார்த்து "எப்படி? முருகேச, என்தோற்றம்" என்று புன்சிரிப்புடன் கேட்டான்; பத்து வருடங்கட்கு முந்தி உம்மை விட்டுப்போன வாலிபதசை இப்பொழுது மீண்டு உம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது" என்று சொல்லிப் புன்சிரிப்புச் செய்தான் முருகேசன்; சட்டைப்பை யொன்றுள் இட்டிருந்த சிகறற் தகரத்தை எடுத்துத் திறந்து ஒரு சிகறற்றை முருகேசனிடங் கொடுத்துவிட்டு இன்னென்றையெடுத்துத் தன் வாயிற் கௌவிக்கொண்டு, முருகேசன் முன்செல்ல, த் தான் பின்னே சென்ருன் சிறிது தூரத்திற்கு.

### ஏன், அம்மா, அப்படி?

இவர்கள் செயல் இங்ஙனமாக, பெண்வீட்டில் அன்று நடந்ததை ஆராய்வோம்; பெண்ணை யொரு முறை மாப்பிள்ளை முந்தியே பார்க்க விரும்புகிருரென்றசெய்தியை வேலாயுதன் தன் மனைவிக்கு மெல்லச் சொன்னன்; கேட்ட மனையாள் முதல் உடன்பட மறுத்தாளாயினும் வேலாயுதன் சில நியாயங்களை அவளுக்குச் சொல்லித் தெருட்டியபின் அவள் ஒருவாறு உடன்பட்டுக் கொண்டாள்; ஆனலும் தங்கள்மகள் அதனையிட்டு இம்மியத்தனையும் அறியவொண்ணுது என்று கணவனுக்குச் சொல்ல, அவனும் "அப்படித்தான் நான் ஒழுங்கு செய்திருக்கிறேன்; அதில் ஒருபிழையும் வராது; அவர்கள் இன்றிரவு 8மணிவரையில்இங்கு வருவதாகத் தெரிவித்திருக்கிருர்கள்: ஆனதால் அதற்காகிய ஆயத்தங்களை இயன்றவரையிற் செய்யத்தானே வேண்டும்; வீடுவாசலையும் அழுக்கின்றிச் சுத்தமாய் வைத்திருக்க வேணும்; நீயும் ஒருவிதமாகத்தான் அவர்கள் வந்துபோகுமட்டும் நடந்துகொள்ளவேண்டும்; மகளையும் சீர்சிறப்பாக வைத்துக்கொள்" என்று சொன்னன்; மனைவியும் அப்படியெல்லாஞ் செய்ய இசைந்தாள்; மகள் அன்று மத்தியானம்வரையில் தலைவார்ந்து சட்டாமல், குளியாமலிருந்தாள்: தாய் என்ன காரணமென்று கேட்டபோது, தனக்கு உடம்பு சிறிது அலுப்பாயிருக்கிறதென்று சோர்வுடன் சொன்னுள்: தாய் சிறிது யோசித்துவிட்டு "மகளே, வெந்நீர் வைத்துத் தாலாம்: குளிக்க இயலாவிட்டால், ஒருவாறு உடம்பைக் கழுவிச் சுத்தி செய்துகொண்டு, உள்ள நகை(ஆபரணங்)களை யிட்டு ஆன சேலையைக் கட்டிக்கொண்டு இரவு எட்டுமணி வரையில் இருந்தால் நல்லது" என்று சொன்னுள்; "ஏன், அம்மா அப்படி?" என்று மகள் கேட்க, "இவளுக்கு இனிக் கருமத்தை மறைக்க முடியா"தென் றெண்ணிக்கொண்டு 'மகளே, வேறொன்றுமல்ல உனக்கு ஒருதக்க இடத்திலே சம்பந்தம் பேசுகிறோம்; அது ஒரு அளவிற்கு நிச்சயமாகும்போற் காணப்படுகிறது; ஆனதால், அந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர் யாரேனும் இன்று இங்கு வருதலுங்கூடும்" என்று சமாதானஞ் சொன்னுள்' மகளும் தாய் சொல்லைத் தட்டாமல் ஒருவாறு வெந்நீரில் ஸ்நானஞ்செய்து தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்;

### "நல்ல கருமத்தில் அல்லச் சொல்லவேண்டாம்"

இரவு $7\frac{1}{2}$ மணியாதலும், சங்கேதப்படி விஜயரத்தினமும் முருகேசனும் பெண்வீட்டிற்குப் போயினர்' வேலாயுதனும் அங்குவந்த அவர்களை நல்வரவேற்றுத் தக்கவாறு உபசரித்தனர்; பரிமளம் மாப்பிள்ளை பகுதியிலிருந்து யாரும் பெண்கள் அங்கு வருவார்களென எதிர்பார்த்திருந்தாள்; எவரும் வந்திலர்; அதனல் அவள் தலைவாசற்பக்கம் வருதலின்றித் தன் அறையுள்ளேயே இருந்துகொண்டாள்; அவளைத் தலைவாசற் பக்கம் வரச்செய்தற்கு ஏதும் உபாயமுண்டோ என்று வேலாயுதனைத் தனியிடத்தில் மெல்லக் கேட்டான்; "உபாயம் எதுவும் வேண்டாம்; வந்திருப்பவர் மாப்பிள்ளை யென்பதை மாத்திரம் பெண் அறியாமலிருத்தல் வேண்டும்; அப்படியானல் நான் தலைவாசற்புறத்திருந்து கூப்பிட மகள் அங்கு வருவாள்; எங்கள் மகள் இக்காலத்துக் கேற்றபடி பள்ளிக்கூடத்திற் போய்ப் படிப்பித்தும் வந்தவள்; ஆதலினல் அதிகம் மறைந்து ஒளித்துத் திரியாள்; தான் முற்பட்டு வரத் தகாதவர் முன்னிலையில் நான் தன்னை வரச் சொல்லமாட்டேன்; கூப்பிடமாட்டே னென்பதை அவள் அறிவாள்" என்ருன் வேலாயுதன்; கேட்ட மனைவியும் சரிதான் என்று சொல்லிவிட்டு மகளிடம் போய், அவள் தன்னை அலங்கரிக்கும் முறையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாளாய் மகளை அன்புபெருகப்பார்த்து "எங்கள் கண்ணே, நல்ல கருமத்தில் அல்லச் சொல்லவேண்டுமடி யம்மா, இந்தச் சம்பந்தத்தைப் பேசி ஒழுங்குபடுத்திய முருகேசுவும், மாப்பிள்ளை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் வந்திருக்கிருர்கள்; வந்த ஆள் உன்னை ஒருமுறை பார்க்கவேண்டுமாம்; அதனற் குறையில்லை, நிச்சயமான பெண்தானே, மகளே, நீ தலைவாசலுக்கு வரவேண்டாம்; தலைவாசலுக்கு இப்பாலுள்ள அறையின் யன்னலுக்குச் சமீபமாக வந்து இரண்டுநிமிஷம் நின்றுவிட்டாற் போதும்" என்ருள்; மகளும் ஒருவாறு உடன்பட்டு அப்படியே அன்னமென நடந்து வந்து குறித்த இடத்திலே மயிலென நாணம் மீதூரநின்ருள்; முருகேசன் கட்சாடைகாட்ட விஜயரத்தினம் பெண்ணின் முகத்தை ஆவலுடன் பார்க்க, அவள் தலை குனிந்தாள்; விஜயரத்தினம் பெண்ணை உற்றுப் பார்க்கக்கூசி முருகேசனைத் திரும்பிப் பார்த்தான்; இதற்கிடையில் பரிமளம் தனக்கு வரித்த மாப்பிள்ளையைப் பார்த்து அவதானித்துக் கொண்டாள். (வரும்)

## ஊர்காவற்றுறைத் தொகுதி

ஊர்காவற்றுறைத்தொகுதிப் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவதற்கு கீழ்க்கண்ட அபேட்சகர்கள் வெளிவந்துள்ளார்கள் என்று நம் நிருபர் அறிவிக்கின்ருர்

1 சேர். வை. துரைசுவாமி
2 திரு செல்லையா அமரசிங்கம்
3 ,, A. V. குலசிங்கம்
4 ,, அல்பிறட் தம்பிஐயா
5 ,, K. அம்பலவாணர்

## நயினர்தீவு நாகபூஷணிஅம்பாள் உற்சவம்

நயினதீவு நாகபூஷணிஅம்பாள் கோவிலின் உற்சவம். நிகழும் ஆனிமீ 10ந், (24—6—47) தொடங்கி ஆனிமீ 19ந் திகதி (3—7—47) முடிவெய்தும். யாத்திரீகர்கள் இலகுவாகப் பிரயாணஞ் செய்வதற்கு ஊர்காவற்றுறையில பல மோட்டர்படகுகள் தயாராகவிருக்கின்றன என்றும் கோவிலுக்கணித்தாக யாத்திரீகர்கட்கு வசதி அளிப்பதற்காக சப்ததீவு இந்துமகாசபை ஏற்ற ஒழுங்குகள் செய்கின்றது என்றும் ஷை சபைக் காரியதரிசி அறிவிக்கின்ருர்.

## தேவியோகம்

### டக்ரர் (ஸ்ரீமதி) புவனேஸ்வரி ரகுநாத்

சிங்கப்பூர் ஸ்ரீ ஈ. பீ. ரகுநாத் அவர்களின் பிரிய மனைவியும், வண்ணர்பண்ணை பீ. ஏ. தம்பி என வழங்கும் நியாயதுரந்தரர் ஸ்ரீ வி. கதிரவேற்பிள்ளை அவர்களின் பேர்த்தியும், ஸ்ரீ வீ ஆசைப்பிள்ளை அவர்களின் புத்திரியும் நியாயதுரந்தரர் ஸ்ரீ ஏ. தனபாலசிங்கம் அவர்களின் சகோதரியுமான ஸ்ரீமதி டக்ரர் புவனேசுவரி சென்ற வெள்ளிக்கிழமை இரவு $10\frac{1}{2}$ மணியளவில் இவ்வுலகவாழ்வை ஒருவினர். இவரது ஈமக்கிரியைகள் அடுத்தநாள் மிகவும் சிறப்பாக நிறைவேறின. இவரைப்பிரிந்து துன்புறும் பெற்ருர், கணவன் சகோதரர் சுற்றமித்திராதியோருடன் யாம் அநுதாபமுறுகின்றேம்.


## புத்தக விளம்பரம்

மூளாய் வரதன்புரம்: [விலை. ரூ ச
ஸ்ரீ சித்திவிநாயகர் திருவூஞ்சல்

| | | |
|---|---|---|
| | ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ,, | 1—00 |
| பிரசுரம் 2 | திருக்கைக்கல்யாணம் | 10 |
| ,, 3 | கோபால கிருஷ்ணன் | 25 |
| ,, 4 | சைவசமயம் | 25 |
| ,, 5 | ,, English | 25 |

இவை மூளாய் றோட்டு வட்டுக்கோட்டை, ஸ்ரீ க. இளையதம்பி அவர்களால் அச்சிடுவிக்கப்பெற்றன.

M 29 16, 20—3, — 6-6-47

## நாகப்பட்டணம் மார்க்கம் சிங்கப்பூர், பினுங் கப்பல்

## புறப்படுந் தேதி

கொஸ்ரே — 18-6-1947
ருஜாலா — 2-7-1947
கொஸ்ரே — 16-7-1947
ருஜாலா — 30-7-1947

தற்கால நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏற்ற வசதிகள் செய்வதற்குத் தகுந்த அவகாசமளிக்கும்நோக்கத்துடன் எம்மிடம் பிரயாணச் சீட்டுப் பெற விரும்புவோர் உங்கள்

பெயரைத் தாமதமின்றிப் பதிவு செய்துகொள்ளுங்கள்

எஸ். ஆர். எஸ். நாதன்
15. சிவப்பிரகாசம் றோட்,
ஐயனர்கோவிலடி :: வண்ணர்பண்ணை

Std 23. 6-6-47—6 6-48

## பிரசித்த விளம்பரம்

பிறிமியர் றொட்டிச்சாய்ப்பின் கிளை ஸ்தாபனம் ஒன்று காங்கேசன் துறையிலே, யாழ்ப்பாணம் — காங்கேசன்துறைப் பெருந் தெருவிலுள்ள 210-ம், இலக்க இல்லத்தில் நிகழும் 1947—ம் ஆண்டு ஆனிமாசம் 11-ந் திகதி புதன்கிழமை திறக்கப்படும்.



அனைவோரும்இதனை ஆதரிக்கும்படியாய் பரிவாகக் கேட்கப்படுகின்ருர்கள்.

## பிறிமியர் பேக்கறி

(1865-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது)

பேதுருப்பிள்ளை றொட்டிச்சாய்ப்பெனப் பிரஸ்தாபமாக அறியப்படுவது

றொட்டி, பிஸ்கற்வகைகள், கேக்குகள் செய்து கொடுப்பதில் முதன்மைவாய்ந்தது

யாழ்ப்பாணமும், காங்கேசன் துறையும்

பேக்கறி, டெலிபோன்: யாழ்ப்பாணம், 44.

ஸ்ரோர்ஸ் & கவே, டெலிபோன்: யாழ்ப்பாணம், 63.

Std 22 6-6-47—6-7-47.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி
சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விள் ட்ரஸ்ற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ் வங்கி

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள்
இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std.12 2-8—31-7-47) (F)



# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.



# எஸ். கே. வி. கல்வி ஸ்தாபனம்

**ஹேமக்குடா, இல. 355 நாவலர் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்**

ஜனவரி மீ மற்றிக்குலேஷன், 1948-ம் ஆண்டு
லண்டன் இன்ரர்மீடியேற்.
1947-ம் 1948-ம் ஆண்டு ஜீ. எஸ். எஸ். ஸீ;
எச். எஸ். ஸீ. வகுப்புக்கள்
தமிழ் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் பயிற்றல்
என்பனவற்றுக்கான பின்னேர வகுப்புக்கள்

**1947-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ந் திகதி ஆரம்பம்**

**சொற்ப இடங்களே உண்டு**

தாமதமின்றிமனுச்செய்க
பதிவுகாரியஸ்தர்

M 40 27, 30, 3, 6-6.47


# விபூதி மான்மியம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல்வேண்டும். ஆசனம் திண்ணை முதலியவற்றின்மே லிருந்துகொண்டு வாங்குதல் ஆகாது. விபூதி கொடுப்போர் கீழே நிற்கத் தான் மேலிருந்து வாங்குவதும் ஆகாது. சிவபக்தியில்லாதவர் மாமிச பக்ஷணமுடைய ஆசாரமிலிகள் கொடுக்கும் விபூதியும் வாங்குதல் முறையன்று. இன்னும் விலைக்குக்கொண்ட விபூதியும் தீக்ஷையில்லாதார் தந்த விபூதியுந் தரித்தலாகாது. தீக்ஷையில்லாதவர் கோயிற் பிரசாதங் கொண்டுவந்தால், அத்திருவெண்ணீற்றை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து எடுத்துத் தரித்தல்வேண்டும். வாயங்காந்துகொண்டும் தலை நடுங்கிக்கொண்டும், கவிழ்ந்துகொண்டுந் தரிக்கிற் குற்றமாமென்று துவிசதிகாலோத்தர முதலிய ஆகமங்கள் கட்டளையிடுகின்றன. இக்கருத்தைக் கடம்பவன புராணமும்.

ஒருகை யிற்கவர்ந் தனதுகிற்
றலையின வொருவர்
தருவி லைக்குவாங் கினவதீக்
கையரளித் தன முன்
கருது பூதிகங் கவிழ்ந்துமங்
காந்துங்கம் பித்துந்


தெருநெ றிப்பட நடந்தும்பூ
சினதருந் தீங்கு.


என வெளியிடுகின்றது. (தொடரும்)

# பசந்த லேகியம்


இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48


தெருநெ றிப்பட நடந்தும்பூ
சினதருந் தீங்கு.

# புதிய நீதியரசர்

பலஸ்தீன் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் நீதிபதியாயுள்ள மிஸ்ரர் வின்ட்ஹாம் என்பவர் இலங்கைச் சுப்றீம் கோட்டு நீதியரசர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்ற ஜனவரிமாதம், இவர் பலஸ்தீனத்து நீதாசனத்தில் இருந்தபோது, யூதப் பயங்கர இயக்கத்தினர் சிலர் திடீரெனத் தோன்றி, நீதிஸ்தலத்தில் இருந்த அவரைத் துப்பாக்கி காட்டிப் பயமுறுத்தி, தூக்கிச் சென்றுவிட்டனர். ஆனால் இரண்டு நாட்களுக்குப் பின் அவர் விடுதலையாக்கப்பட்டார்.


# அறிவித்தல்

இத்தாற் சகலரும் அறியவேண்டியது சுளிபுரம் அ. சி. வேலாயுதபிள்ளை என்பவர் எனக்குரிய நூறு வருஷங்களுக்கு மேற்பட்ட ஆட்சியிலிருக்கும் சுளிபுரம் இறைக்குச் சேர்ந்த பாலிசாடுளன்னுங் காணியைவிற்பதற்கு முயற்சி செய்கிறார் என்று அறிகிறேன். அக்காணியில் யாதொரு சோந்தையும் அவருக்கு இல்லையென்றும் முழு உரித்தும் எனக்கே உண்டென்றும் அக்காணியை வாங்க விரும்புபவர்களுக்கும் நொத்தாரிஸ்மாருக்கும் அறியத்தருகிறேன்.

இங்ஙனம்
27—5—47 சு. சம்பந்தர்

M 42 3-6.47 —6-6-47



**தமிழ் ஆசிரிய தராதரப் பத்திர பரீக்ஷை**

**1947-ம் ஆண்டு ஆகஸ்டு 11உ**

# தபால்மூலம் கல்வி

தபால்மூலம் நாம் பின்வரும் பாடங்களைப் போதிக்க வல்லேம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | படிப்பிக்கும் விதிகள் | 6. | பூமிசாஸ்திரம் |
| 2. | படிப்பிக்கும் முறைகள் | 7. | சரித்திரம் |
| 3. | சுகாதாரமும் தேகப்பயிற்சியும் | 8. | பாடீசணிதம் |
| 4. | பாஷையும் வியாசமும் | 9. | உயர்தரகணிதம் |
| 5. | இலக்கியம் | 10. | நாட்டுச்சீவனசாஸ்திரம். |

எங்கள் பாடமுறைகள், தமிழ்ப்போதனு கல்லூரிகளில் மிகுந்த அநுபவமும் தேர்ச்சியும் பெற்றுள்ள சிறந்த ஆசிரியர்களால் வகுக்கப்படுவன. சென்றமுறை நிகழ்ந்த பரீட்சைக்கு, பன்னூற்றுக் கணக்கான மாணவர்கள் எம்மிடம் படித்து, எங்களுடைய உந்நத முறையைப் பாராட்டியுள்ளார்கள். சென்றமுறைப் பரீட்சையில் வெளிவந்த வினாக்களில் அநேகமானவை, எங்களுடைய பாடங்களின்போது எங்கள் மாணவர்களுக்கு நாம் கொடுத்த பரீட்சை வினாக்களில் அடங்கி யிருந்தமை ஈண்டுக் குறிப்பிடத்தக்க ஓர் விசேஷ அம்சமாகும்; எங்களைச் சேர்ந்து, எங்கள் உதவியைநாடும் மாணவர்களுக்கு அவர்கள் பரீட்சையிற் சித்தியடைவர் என்று உத்தரவாதம் அளிக்கிறேம். எங்களிடம் இருந்தே ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கற்றுத் தேறவேண்டும் என்ற அவாவினுல், நாங்கள் இதுவரை விதித்துவந்த வேதன விகிதத்தையும் குறைத்திருக்கிறேம்.

தயவுசெய்து இன்றே விபரங்களுக்கு எழுதுக.

| | |
|---|---|
| Atlas Hall<br>Postal School<br>723, Maradana Rd,<br>Colombo. | அற்லஸ் ஹால்,<br>723, மருதானை ரோட்,<br>கொழும்பு. |

Std 19, 27—5—26-8-47.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, June, 6, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org